ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2064/8 - 2018 මාර්තු මස 26 වැනි සඳුදා - 2018.03.26

*2064/8 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## *மாகாண சபை அறிவித்தல்கள்*

### *1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, மாகாண சபைகள் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 32(2) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

மேல் மாகாணத்தின் ஆளுநர் கே. சீ. லோகேஸ்வரன் ஆகிய நான், 1990 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, மாகாண சபைகள் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 32(1) ஆம் உப பிரிவின்கீழ் மேல் மாகாண அரச சேவையின் உத்தியோகத்தர்களின் நியமனங்கள், இடமாற்றங்கள், பதவியுயர்வுகள், பதவி நீக்கங்கள் மற்றும் அவர்களின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பாக எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களை மாகாண சபைகள் சட்டத்தின் 32(2) ஆம் உப பிரிவிற்கு இணங்க 01 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின்கீழ் மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுச் சபைக்கு 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 16 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வருமாறு இங்கு கையளிக்கின்றேன். 02 ஆம் இலக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்குரிய அதிகாரம் மேல் மாகாணத்தின் ஆளுநருக்குரியதாகும்.

ஒழுக்காற்று அதிகாரியின் அல்லது மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுச் சபையின் முடிவுகளில் அதிருப்தி அடைபவர்கள் மேல் மாகாண ஆளுநருக்கு மேன்முறையீடு செய்வதற்கு உரிமை உண்டு என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.

இந்த அதிகாரங்களைக் கையளிப்பது நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் நடைமுறையிலிருந்த மேல் மாகாண அரச சேவையில் அதிகாரங்களைக் கையளிப்பதற்குரிய 1859/32 ஆம் இலக்க 2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்த 2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதிய கட்டளைகளின்கீழ் எடுக்கப்பட்ட எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் பாதிப்பொன்று ஏற்படாதவாறு முன்னர் சேவையிலிருந்த மேல் மாகாண அரச சேவையின் அதிகாரங்கள் இல்லாதொழிக்கப்படுவதாகவும் இத்தால் அறிவிக்கின்றேன்.

கே. சீ. லோகேஸ்வரன்,
மேல் மாகாண ஆளுநர்.

மேல் மாகாண ஆளுநர் பணிமனை,
ரொட்டுண்டா கட்டிடம்,
இலக்கம் 109, 5 ஆம் மாடி,
கொழும்பு 03,
2018, மாச்சு 22.

1A - PG 3960 — 10 (2018/03)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை இல. 01**

(அ) மேல் மாகாண பிரதம செயலாளர் அல்லது வேறு ஏதாவது உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்படும் நியமனங்கள், நியமனங்கள் செய்யமுன் மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவுக்கு அறிவிக்க வேண்டும்.

(ஆ) மேல் மாகாண பிரதம செயலாளர் அல்லது அதிகாரம் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தரால், சேவையின் அத்தியாவசியத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இடமாற்றங்கள் மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் உடன்பாட்டுடன் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**அட்டவணை இல. 02**

| தொடர் இல. | சம்பளக் குறியீடு | உத்தியோகத்தர்களின் தரம் |
|---|---|---|
| 01 | SL - 3 | மாகாண ஆளுநரின் செயலாளர் |
| 02 | SL - 3 | மாகாண சபைச் செயலாளர் |
| 03 | SL - 3 | மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளர் |
| 04 | SL - 3 | கௌரவ முதலமைச்சரின் விடயப் பரப்புக்குரிய நிதி, திட்டமிடல், பொறியியல் சேவை, சட்டம் மற்றும் ஒழுங்கு, மாகாண நிர்வாகம் ஆகிய விடயப் பரப்புகளுக்குரிய கடமைகள் தொடர்பான செயலாளர் |
| 05 | SL - 3 | உள்ளூராட்சி, பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மற்றும் மின்வலு சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அத்துடன் சுற்றுலாத்துறை நடவடிக்கை தொடர்பான அமைச்சின் செயலாளர் |
| 06 | SL - 3 | கல்வி, கலாச்சாரம் மற்றும் கலை நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம் அத்துடன் தகவல் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் |
| 07 | SL - 3 | விவசாயம், காணி, நீர்ப்பாசனம், கடற்றொழில், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரம் அத்துடன் கமநல அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் |
| 08 | SL - 3 | வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வாணிபம், வீடமைப்பு மற்றும் நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் |
| 09 | SL - 3 | சுகாதாரம், உள்நாட்டு வைத்தியம், சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளிர் விவகாரம் அத்துடன் சபை நடவடிக்கை அமைச்சின் செயலாளர் |
| 10 | SL - 3 | பிரதி பிரதம செயலாளர் (நிர்வாகம்) |
| 11 | SL - 3 | பிரதி பிரதம செயலாளர் (ஆநந:ளணியும் பயிற்சியும்) |
| 12 | SL - 3 | பிரதி பிரதம செயலாளர் (நிதி) |
| 13 | SL - 3 | பிரதி பிரதம செயலாளர் (திட்டமிடல்) |
| 14 | SL - 3 | பிரதி பிரதம செயலாளர் (பொறியியல்) |
| 15 | SL - 1 | மாகாண இறைவரி ஆணையாளர் |
| 16 | SL - 1 | உள்ளூராட்சி ஆணையாளர் |
| 17 | SL - 1 | மாகாண கல்விப் பணிப்பாளர் |
| 18 | SL - 1 | மாகாண விவசாயப் பணிப்பாளர் |
| 19 | SL - 1 | மாகாணக் காணி ஆணையாளர் |
| 20 | SL - 1 | மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர் |
| 21 | SL - 1 | மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் |
| 22 | SL - 1 | மாகாண மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் |
| 23 | SL - 1 | மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச் சபையின் செயலாளர் |
| 24 | SL - 1 | மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் |
| 25 | SL - 1 | மாகாண வியாபாரப் பெயர் பதிவாளர் |
| 26 | SL - 1 | மாகாண வீடமைப்பு ஆணையாளர் |
| 27 | SL - 1 | மாகாண கைத்தொழில் பணிப்பாளர் |
| 28 | SL - 1 | மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் |

**அட்டவணை இல. 02** *(தொடர்ச்சி)*

| தொடர் இல. | சம்பளக் குறியீடு | உத்தியோகத்தர்களின் தரம் |
|---|---|---|
| 29 | SL - 1 | மாகாண ஆயுர்வேத ஆணையாளர் |
| 30 | SL - 1 | மாகாண சமூக சேவைகள் பணிப்பாளர் |
| 31 | SL - 1 | மாகாண நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் ஆணையாளர் |
| 32 | SL - 1 | மாநகர ஆணையாளர், கொழும்பு மாநகர சபை |
| 33 | SL - 1 | மாநகர ஆணையாளர், தெஹிவளை-கல்கிசை மாநகர சபை |
| 34 | SL - 1 | மாநகர ஆணையாளர், மொறட்டுவை மாநகர சபை |
| 35 | SL - 1 | மாநகர ஆணையாளர், கடுவெல மாநகர சபை |
| 36 | SL - 1 | மாநகர ஆணையாளர், கம்பஹா மாநகர சபை |
| 37 | SL - 1 | மாநகர ஆணையாளர், நீர்கொழும்பு மாநகர சபை |
| 38 | SL - 1 | பிரதம செயலாளர் அலுவலகத்தின் பிரதான உள்ளடக்கக் கணக்காய்வாளர் |
| 39 | SL - 1 | பிரதம செயலாளர் அலுவலகத்தின் பிரதான கணக்காளர் (கணக்கும் கொடுப்பனவும்/வரவு செலவு/ நிதியும் இறைவரியும்) |
| 40 | SL - 1 | மனிதவள அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவப் பயிற்சி நிலையத்தின் பணிப்பாளர் |
| 41 | SL - 1 | மாகாண அமைச்சுக்களின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் |
| 42 | SL - 1 | ஆளுநரின் செயலாளர் அலுவலகத்தின் உதவிச் செயலாளர் |

*04-379*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.